# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. S.T.C.362/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | எ.சா.1 |
| Name | : | சுபாசினி |
| Father's Name | : . | |
| Village | : . | |
| Taluk | : . | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : . | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 16.07.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

. நான் அரசு பதிவு பெற்ற மருந்தாளுனர் என்றால் சரிதான். எதிரி நடத்தி வரும் ஐஸ்வர்யா மருந்தகத்தில் நானும் மருந்தாளுனராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி மருந்தகத்தில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பணியாற்றி வருகிறேன். ஐஸ்வர்யா

மருந்தகம் அரசு அனுமதி பெற்று உள்ளது என்றால் சரிதான். நான் வெளியம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். மருந்தகம் ஒசூரில் இயங்கி வருகிறது. எனது கிராம பகுதியில்தான் மருந்தகம் இயங்கி வருகிறது என்றால் சரிதான். மேற்படி ஒசூர் கிராமம் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்ததாகும். நானும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர்தான். மருந்தாய்வாளர் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தாரா என்றால் இல்லை. மருந்தகத்தை ஆய்வு செய்யும்போதும் என்னை விசாரிக்கவில்லை. அ.த.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள எனது கையொப்பத்தை மருந்துகள் ஆய்வாளர் என்னிடம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஆவின் பால் நிலையத்தில் வைத்து வாங்கினார் எதற்காக வாங்கினார் என்று என்னிடம் சொல்லவில்லை. அதில் கடந்த 22.04.2021 முதல் 20.05.2021 வரை நான் விடுப்பில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. எனக்கு தனியாக சம்மன் எதுவும் கொடுத்து விளக்கம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 22.04.2021 முதல் 20.05.2021 வரையிலான கால கட்டம் கொரனா தொற்று காலம் என்றால் சரிதான். அது ஊரடங்கு காலம் என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் மருத்துவ சம்மந்தப்பட்ட நபர்கள் மட்டும் செல்ல அனுமதியிருந்தது என்றால் சரிதான். மருந்துகள் ஆய்வாளர் மருந்தகத்தை ஆய்வு செய்த அன்று நான் மருந்துகளை வீட்டிற்கே சென்று கொடுக்கும் பணி செய்து வந்தேன். அந்த கொரணா கால கட்டத்தில் மருந்து சீட்டு எதையும் வாங்கி வைக்கவில்லை. ஆனால் வீட்டிற்கே சென்று மருந்து விநியோகம் செய்த விவரங்களை பதிவேடுகளில் பராமரித்து வந்தோம். நாங்கள் பராமரித்து வந்த பதிவேடுகளை என்னிடம் சம்மன் அனுப்பி ஆய்வாளர் கேட்டு பெறவில்லை. மருந்துகள் ஆய்வாளர் ஆய்வு சமயத்திலோ, அதன் பின்னிட்டோ என்னை விசாரணை செய்யவில்லை. ஒருவருடம் கழித்துதான் என்னிடம் ஆய்வாளர் இவ்வழக்கு சம்மந்தமாக கையொப்பம் பெற்றார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தற்போதும் எதிரி நடத்தி வரும் மருந்தகத்தில் மருந்தாளுனராக பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போதும் நான் முதல் விசாரணையில் சொல்லியபடி என்னால் பராமரித்து வரும் மருந்துகளை வீட்டிற்கு சென்று விநியோகம் செய்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டினை நான் ஆஜர் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த பதிவேடும் பராமரிக்கவில்லை என்பதால்தான் நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 22,04,2021 முதல் 20.05.2021 நான் எதிரியின் மருந்தகத்தில் வேலை பார்த்துவந்தேன் என்பதற்கான வருகை பதிவேடு அல்லது அன்று விற்பனை செய்த மருந்துகளை விற்பனை செய்ததற்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த காலகட்டத்தில் மருந்தகத்தில் விடுமுறையில் இருந்தேன் அதனால்தான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருந்து ஆய்வாளருக்கு மேல் அதிகாரிகள் உள்ள விவரம் எனக்கு தெரியும். மருந்து ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக காலதாமதமாக ஒருவருடம் கழித்து கையொப்பம் பெற்ற விவரத்தை மேல் அதிகாரிக்கோ அல்லது அரசுக்கோ எழுத்து பூர்வமாக நான் தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. நான் சொல்வதுபோல் உண்மையில் அதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை அதனால்தான் நான் எழுத்து பூர்வமாக தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.3 வரிசையில் உள்ள விவரங்கள் நான் பணி செய்து வரும் மருந்தகத்தின் மருந்துகள் விற்பனை செய்ததற்கான ரசீதுகளின் அடிகட்டு என்றால் சரிதான். அந்த அடிகட்டு நகலில் உள்ள கையெழுத்து எதிரியின் கையொப்பம் என்றால் சரிதான். மருந்ததுகள் சட்ட விதி 65 உட்பிரிவு 2ன்கீழ் மருந்து விற்பனை செய்யக்கூடிய ரசீதுகளில் மருந்து ஆளுனர் கையொப்பம் இடவேண்டும் என்றால் சரிதான். ரசீது எண்கள். 1771 முதல் 1816 வரை உள்ள ரசீதுகளில் என்னுடைய கையொப்பங்கள் இல்லையென்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.6 என்னால் பராமரித்து வரும் பதிவேடு என்றால் சரிதான். அந்த பதிவேட்டில் மருந்து யாருக்கு விற்பனை செய்யப்படுகிறது என்ற விவரத்தை எழுதி அதில் எனது கையொப்பத்தை இடவேண்டும் என்று விதி 65 உட்பிரிவு 3ல் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6ல் பதிவேடு வரிசை எண்.159, 161, 163 ஆகிய பக்கங்களில் என்னுடைய கையெழுத்து காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

வரிசை எண்.149, 151, 153, 155, 157 ஆகிய பக்கங்களில் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தனித்தனியாக கையொப்பம் இடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.4ன்படி மருந்தகத்தில் மருந்துகளை கொள்முதல் செய்துள்ள ரசீதுகளுக்கும், மருந்துகளை ரசீதுகளுக்கும் ஒப்புமை செய்யப்பட்டபோது அந்த ரசீதுகள் ஒப்புமை ஆகவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எதிரியின் மருந்தகத்தில் வேலை பார்ப்பதால் எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மருந்தகத்தில் மருந்துகளை விநியோகம் செய்யும்போது வாடிக்கையாளர்கள் கொடுக்கும் மருத்துவரின் பரிந்துரை சீட்டுகளை வாங்கி வைக்கும் விதி கிடையாது. ஆனால் மருத்துவரின் பெயர் பதிவேட்டில் குறிப்பிடவேண்டும் என்று விதி உள்ளது என்றால் சரிதான். ஆனால் அ.த.சா.ஆ.4 பதிவேட்டில் மருத்துவரின் பெயர் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.